ஆயர் திருமுகம்

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

Pastoral letter No/GR/55/2026

ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!
அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்
ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

இந்தியத் திருச்சபையின் முதல் புனிதையும், சிரோ மலபார் திருச்சபையின் புனித மலருமான புனித அல்போன்சா, தமக்கென எந்தவொரு சாதனைகளோ அல்லது பதவிகளோ இல்லாமல் வாழ்ந்தவர். துன்பங்களின் அம்புப் படுக்கையில் அமர்ந்து கொண்டு அன்பின் கீதத்தைப் பாடிய புனித அல்போன்சா, துன்பங்களுக்கு ஒரு புதிய விளக்கத்தைத் தந்தவர். பரணங்கானம் கிளார மடத்தின் கற்சுவர்களுக்குள் வாழ்ந்த அந்தப் புனித நறுமணம் உலகெங்கும் பரவியது. ஜூலை 28-ஆம் தேதி அல்போன்சாமாவின் திருவிழாவைத் திருச்சபை கொண்டாடுகிறது. மரணம் என்பது வாழ்க்கையின் முடிவல்ல, தாழ்மையுள்ளவர்களை உயர்த்தும் இறைவன், அவரது வாழ்வை மாட்சிப்படுத்தினார். ஒரு சிறகடிக்கும் சத்தம் கூட எழுப்பாமல் அந்தப் புனிதை இந்த உலகை விட்டுப் பயணமானார். அவரது இறுதிச் சடங்குகள் மிகவும் சாதாரணமானதாகவும் எளிமையானதாகவும் இருந்தன. ஆனால், அவரது மரணத்திற்குப் பின் நடந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றும் அசாதாரணமானவையாக அமைந்தன.

1910 ஆகஸ்ட் 19 அன்று, வரலாற்றுச் சிறப்புமிக்க குடமளூர் கிராமத்தில், முட்டத்துபாடத்து யோசேப்பு - மேரி தம்பதியரின் நான்காவது குழந்தையாக அன்னக்குட்டி (புனித அல்போன்சா) பிறந்தார். அனைவரையும் கவரும் பேரழகும், தூய்மையான ஆன்மாவும், அசாத்திய புத்திசாலித்தனமும் கொண்ட அந்த அழகிய மலரில், தேனைப் போல நட்பும் அழகும் சேர்ந்துகொண்டன. ஏழைகளிடத்தில் அன்பு செலுத்துதல், ஜெபம், நற்கருணை போன்ற அருட்சாதனங்களைப் பெறுதல், நோன்பு இருத்தல், புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை வாசித்தல் போன்றவற்றின் மூலம் அந்த குடும்பச் சூழலே, பின்னாளில் அல்போன்சாவாக மாறிய அன்னக்குட்டியின் உள்ளத்தில் இறை அன்பின் விதைகளை முளைக்கச் செய்தது. நம்முடைய குழந்தைகள் புனிதர்களாக மாற நம்முடைய குடும்பச் சூழல் தூய்மையானதாக இருக்க வேண்டும். இறை அன்பின் மீதும், பிறர் அன்பின் மீதும் நம்முடைய குடும்பங்களை இன்னும் உறுதியாகக் கட்டியெழுப்புவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

சிறு வயதிலேயே தாயை இழந்த அன்னக்குட்டிக்கு வாழ்க்கை எளிதாக இருக்கவில்லை. ஆனால், அந்தத் துயரங்களும் இன்னல்களும் அவளை மனம் தளரவிடவில்லை, மாறாக இறைவனுடன் அதிக நெருக்கம் கொள்ள அவளுக்கு உதவின. ஜெபமும் நம்பிக்கையும் அவளது வாழ்வின் அடித்தளமாக மாறின. இறைவன் தனக்குத் தந்த அழகை இறைவனுக்கே திருப்பி அளிக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டவளாக அவள் இருந்தாள். அழியக்கூடியவற்றை விட்டுவிட்டு அழியாததைத் தேட வேண்டும் என்ற ஆன்மாவின் அழைப்பு, அவளது வாழ்வுக்கு எதிராக வந்த சவால்களைத் துணிவோடு எதிர்கொள்ளும் தைரியத்தை அளித்தது. பல எதிர்ப்புகள் வந்தபோதிலும், தன் இறை அழைத்தலிலிருந்து அவள் ஒருபோதும் பின்வாங்கவில்லை. ”ஏழை அன்னக்குட்டி” தன் வாழ்நாளின் ஆசைப்படியே ”ஏழை கிளார” சபையில் இணைந்தார். இறைவனின் வழிகள் மறைவனவை என்பதைப் பறைசாற்றும் வரலாற்றுச் சான்றாகப் புனித அல்போன்சாமாவும் அவளது துறவற அர்ப்பணிப்பும் திகழ்கின்றன.

உடல் ரீதியான நோய்களின் துன்பங்களும், மன ரீதியான வேதனைகளும் அல்போன்சாமாவைச் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் உன்னத மணவாட்டியாக மாற்றின. அவளது சொந்த வார்த்தைகளில் சொல்வதானால், கோதுமை மணி இடிக்கப்பட்டு தன்னையே வருத்தி நற்கருணைக்கான புனித அப்பமாவது போலவும், முந்திரிப் பழம் ஆலையில் இடப்பட்டு நற்கருணைக்கான திராட்சை இரசமாவது போலவும், அவளது வாழ்க்கை துன்பங்களின் மூலம் தூய்மையாக்கப்பட்டு, மாசற்ற வைடூரியமாக மாறியது.

ரோஜாச் செடியின் அடியில் உதிர்ந்து விழும் உலர்ந்த இலை ரோஜா செடிக்கு உரமாக மாறுவதைப்போல தன்னையும் மாற்றிக்கொள்ள ஆசைப்பட்ட அந்த அருட்சகோதரி இன்று உலகம் முழுவதும் அறியப்பட்டவராக இருக்கிறார். சிலுவையில் அறையப்பட்டவரிடம் கொண்ட அன்பின் மூலம் சிலுவைகளை அன்பு செய்ய அவள் கற்றுக்கொண்டாள். தூக்கமில்லாத வேதனை நிறைந்த இரவுகளை இறைவனை அன்பு செய்வதற்கான வாய்ப்புகளாக மாற்றிய ஒரு அழகான வாழ்க்கை அவளுடையது.

தனது வாழ்க்கையில் தான் அனுபவித்த நோய்கள் துன்பங்கள் என எல்லா வேதனைகளையும் கிறிஸ்துவின் சிலுவையோடு இணைத்து இறைவனுக்கு அர்ப்பணித்தார். ”துன்பமே புனிதத்துவத்திற்கான வழி” என்பதைத் தன் வாழ்வின் மூலம் அவள் உலகிற்குக் கற்பித்தார். இறைவன் அனுமதிக்கும் ஒவ்வொரு அனுபவத்திற்கும் ஒரு அர்த்தம் உண்டு என்றும், விசுவாசத்தோடு அதை ஏற்றுக்கொள்ளும்போது அது அருளின் வழியாக மாறும் என்றும் அவள் நிருபித்தார்.

ஜெபத்தின் மூலம் அவள் இறைவனுடன் இடைவிடாது இணைந்திருந்தார். தாழ்மையில் அவள் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். தியாகத்தின் மூலம் கிறிஸ்துவின் வழியில் நடந்தாள் அன்பின் மூலம் பலருடைய இதயங்களைத் தொட்டாள். அதனால்தான் இன்றும் லட்சக்கணக்கான மக்கள் அவளை அன்போடும் பக்தியோடும் நினைவு கூர்கின்றனர்.

எடை குறைந்த ஒரு பறவை சத்தம் இல்லாமல் பறப்பது போல அவளது ஆன்மா 1946 ஜூலை 28 அன்று ஏற்பட்ட ஒரு கடும்அவதியால், அமைதியாகவும் நிம்மதியாகவும் விண்ணகத் தந்தையின் திருவடிக்கு பறந்து சென்றது. அல்போன்சாமாவின் புனிதமான வாழ்வின் நறுமணத்தை முதலில் கண்டுகொண்டவர்கள் குழந்தைகளே ஆவர். அவளது பரிந்துரையால் பல குழந்தைகள் தேர்வுகளில் வெற்றி பெற்றனர். இந்தத் தகவலை அறிந்த ஏராளமானோர் புனித அல்போன்சாமாவின் பரிந்துரையை நாடி பரணங்கானத்தில் உள்ள அவளது கல்லறைக்கு வந்தனர். புதுமைகளும் நோயிலிருந்து விடுதலையும் பரணங்கானத்தை “இந்தியாவின் லிசியூ“ (Lisieux of India) ஆக மாற்றின. அல்போன்சாமா இறந்து 40 ஆண்டுகள் கடந்த பிறகு, 1986 பிப்ரவரி 8 ஆம் தேதி கோட்டயத்தில் வைத்து புனித இரண்டாம் ஜான் பால் திருத்தந்தை அவளை அருளாளராக அறிவித்தார். 2008 அக்டோபர் 12 அன்று, இந்தியாவின் இந்த முதல் புனித மகளின் புகழ்ப்பாடல்கள் ரோமில் உள்ள புனித பேதுரு பேராலயத்தில் எதிரொலிக்க திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அல்போன்சாமாவைப் புனிதர் நிலைக்கு உயர்த்தினார். புனித அல்போன்சாவின் புகழ் நமது மறைமாவட்டத்தில் 2008- ம் ஆண்டிலிருந்து நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலம் வழியாக தமிழ் நாட்டில் பரவத் தொடங்கியது. ஓவ்வொரு ஆண்டும் புனித அல்போன்சா திருவிழாவானது மிகச் சிறப்பாக நமது மறைமாவட்டத்தால் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டும் எல்லா வருடங்களைப் போல நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல பேராலயத்தில் பத்து நாள் திருவிழா 24 ஜூலை 2026 முதல் 02 ஆகஸ்ட் 2026 வரை நடைபெறுகிறது. ஏராளமான மக்கள் புனித அல்போன்சம்மாவின் பரிந்துரையை நாடி இந்த நாட்களில் ஜெப உணர்வுடன் பக்தியுடனும் திருப்பலியிலும் நவ நாளிலும் பங்கேற்கின்றனர். நவநாள் ஜெப வழிபாடு நமது நம்பிக்கையை

புதுப்பிப்பதற்கும், ஆன்மீக வாழ்வை வலுப்படுத்துவதற்கும், இறை அருளைப் பெறுவதற்கும் இறைவன் நமக்குத் தந்த நல்ல ஒரு வாய்ப்பாக அமைகின்றது.

இறையாசீர் நிறைந்த இந்த நல்ல நாட்கள் வழியாக நாம் பயணிக்கும் போது, நம் இதயங்களில் ஜெபத்தோடும் நன்றியோடும் ஒளிவீசும், கண்ணீர் கலந்த ஒரு நினைவுதான், பேரட் தந்தை தாமஸ் பவ்வத்துப்பரம்பில் அடிகளார். அவரது மறைவினால் ஏற்பட்டுள்ள இந்த இழப்பு நாகர்கோவிலில் உள்ள இந்தத் திருத்தலத்திற்கும், இங்கு வரும் பக்தர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு வெற்றிடமாக மாறியுள்ளது. அல்போன்சம்மாவின் ஒரு செல்லக் குழந்தையாகவே அந்த உன்னத குரு நம்மிடையே வாழ்ந்து, நம்மை விட்டுப் பிரிந்து சென்றார். புனித அல்போன்சாமாவிடம் அவர் கொண்டிருந்த அன்பும் பக்தியும் அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் அது வெறும் பக்தி மட்டுமல்ல, மாறாக அது ஒரு வாழ்க்கை முறையின் வெளிப்பாடாக இருந்தது என்று அவரின் வாழ்க்கையே சாட்சியமளிக்கிறது. அவர் தனது வாழ்விலும் பணிவிடையிலும் “அல்போன்சாவின் ஆன்மீகத்தை“ பிரதிபலிக்க முயன்றார்.

பலர் அவர் வழியாக புனித அல்போன்சம்மாவின் பரிந்துரை ஆற்றலை அனுபவித்து அறியவும், அதன் வழியாக இறைவனை மாட்சிப்படுத்தவும் வாய்ப்புப் பெற்றனர். ஜெபத்திலும், பணிவிடையிலும், பக்தர்களிடம் காட்டிய அணுகுமுறையிலும் அவரின் ஆன்மீக வாழ்வு தெளிவாக விளங்கியது. புனித அல்போன்சாமாவின் வாழ்வுச் செய்தியை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் அவர் பெரும் பங்காற்றினார்.

இறைமக்களுக்கு ஜெபத்தின் முக்கியத்துவத்தையும், துன்பங்களின் மதிப்பையும் அருட்தந்தை தனது வாழ்வின் மூலம் கற்றுத் தந்ததோடு ஆலய வளர்ச்சிக்காகவும், மக்களின் ஆன்மீக எழுச்சிக்காகவும் அவர் ஆற்றிய சேவைகளை ஒருபோதும் மறக்க முடியாது.

அருட்தந்தையின் தலைமையிலும் ஊக்கத்திலும் இந்தத் திருத்தலம் பல நம்பிக்கையாளர்களின் ஆன்மீகப் புகலிடமாக வளர்ந்தது. ஜெபத்தின் மீது அவர் கொண்டிருந்த அன்பும், மக்கள் மீது அவர் காட்டிய அக்கறையும் அனைவரது இதயங்களிலும் இன்றும் துடிப்புடன் இருக்கின்றன. அவர் இன்று நம்மோடு இல்லை எனினும், அவரது சேவையும் ஆன்மீகச் செயல்பாடுகளும் என்றும் நம் இதயங்களில் நிலைத்திருக்கும். இந்த நவநாள் நாட்களில் புனித அல்போன்சம்மாவின் பரிந்துரையை வேண்டுவதோடு, அருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பரம்பில் அடிகளாரை நன்றியோடு நினைவு கூர்வோம். அவரது ஆன்மா நித்திய இளைப்பாறுதல் பெற நாம் ஜெபிப்போம்.

அன்பானவர்களே, புனித அல்போன்சாமாவின் வாழ்க்கை இன்றும் நமக்கு ஒரு பெரிய சவாலாக இருக்கிறது. இன்பங்களையும் வசதியையும் மட்டுமே தேடும் உலகில், துன்பம், அர்ப்பணிப்பு மற்றும் ஜெபம் நிறைந்த வாழ்க்கையை வாழ அவள் நம்மை அழைக்கிறாள். குடும்ப வாழ்விலும், பணித்துறையிலும், சமூக உறவுகளிலும் எதிர்கொள்ளும் கடினங்களை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள அவளது வாழ்க்கை நமக்கு ஊக்கமளிக்கிறது. இறைவனிடம் அன்பும், பிறரிடம் இரக்கமும் வளர்த்துக்கொள்ள புனித அல்போன்சா நமக்குக் கற்றுத் தருகிறார்.

புனித அல்போன்சாவின் திருவிழாவோடு இணைந்து நாம் வழக்கமாக நமது பங்குளில் செபிக்கின்ற புனித அல்போன்சா நவநாளை ஒன்பது நாட்கள் செபிப்போம். ஜூலை மாதம் 25 ம் தேதி சனிக்கிழமையில் புனித அல்போன்சா திருத்தலம் நோக்கிய திருப்பயணம் தக்கலை மறைமாவட்ட இளையோர் தலைமையில் நடைபெறும். இதில் ஏராளமான மக்கள் பக்தியோடு கலந்து கொண்டு இறையாசிர் பெற்றுக் கொள்ள நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கடைசி திருவிழாவான 02 ஆகஸ்ட் 2026, ஞாயிறு அன்று தக்கலை மறைமாவட்ட புனித பயண நாளாக நாம் கொண்டாடுகிறோம். எனவே அந்த நாளில் அனைத்து அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் இறைமக்களும்

கலந்து கொண்டு புனித அல்போன்சம்மாவின் பரிந்துரை வழியாக இறையருள் நிறைவாக பெற்றுச் செல்ல நான் உங்களை அன்போடு அழைக்கிறேன்.

புனித அல்போன்சம்மாவின் வாழ்க்கை நம்மை நம்பிக்கை வாழ்விலும், துன்பங்களை ஏற்கும் மனப்பக்குவத்திலும், பிறரன்பிலும் வளர்க்கட்டும். அவளது பரிந்துரை நம் குடும்பங்களுக்கும், ஆலயத்திற்கும், சமூகத்திற்கும் நிறைவான இறையாசீரை பெற்றுத்தரட்டும் என வேண்டுதல் செய்வோம். இறைவன் உங்களுக்கு நிறைவாக ஆசீர் அளிப்பாராக.

ஆயர் இல்லம்

15.07.2026

என்றும் ஈசோ மெசியாவில்

✝மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இத்திருமுகத்தை 19.07.2026, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்.

DIOCESE OF THUCKALAY

Chancery : diocesethuckalay@gmail.com
Mission Procure : thuckalaymission@gmail.com
: www.thuckalaydiocese.org

Reception +91 94426 14118
Bishop's Secretary +91 90036 06855